46 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 15-5-33

தவசியின் தரிசனம்!



டாக்டர் அன்ஸாரி கவலையோடு ஹிருதய ஓட்டத்தைக் கவனித்துக் கொண்டிருக்க தேவி சரோஜினி அருகிலிருந்து சிகிச்சை செய்ய காந்தியடிகள் பூனாவில் கடுந்தவமிருந்து வருகிறார். திருக்குலக் கடவுளாகிய நடராஜப் பெருமானின் பாதக்கிரணம் திருக்குல பக்தராகிய காந்தியடிகளைக் காக்குமன்றோ!

சுத்த தப்பிதம்!

சட்ட மறுப்பு இயக்கம் தாத்காலீகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. ராஜீயக் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென காந்திஜி கோரியதை அரசாங்கம் நிராகரித்து விட்டது. காந்திஜி இப்போது மகத்தான தவத்தில் ஈடுபட்டிருக்கின்றார். ஆகவே இந்தத் தவம் முடிந்து அய்யனுக்கு உடல் நலம் சிறிது ஏற்பட்டவுடன் காங்கிரஸ் தலைவர்களனைவரும் ஒன்று கூடி ராஜீய நிலைமையைப் பற்றி ஆலோசிப்பார்களென்பது திண்ணம். சமாதானத்திற்கு காந்திஜி அழைத்திருக்க அதை அரசாங்கம் தடித்தனமாக நிராகரித்து விட்டதை அநியாய மென்று மிதவாதிகளும், லிபரல்களும் கூட பகிரங்கமாகச் சொல்லி வருகின்றனர். இந்த நெருக்கடியான நிலையைப்போக்குவதற்கு காந்தியடிகள் செய்த செய்கை ரா்ஜதந்திரத்தில் மேம்பட்டது என்று உலகமே புகழ்கின்றது.

ஆனால் வியன்னாவிலிருந்து வித்தல்பாய் படேலும், சுபாஷ் சந்திர போஸும் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் "மகாத்மா காந்தி ராஜீயத் தலைமை வகித்துத் தோற்று விட்டார். ஆகவே காங்கிரஸைத் திருத்தி யமைக்க வேண்டும்" என்று கூறியிருக்கின்றனர். சமயா சமயம் தெரியாமல் இந்த மாதிரி காந்தியடிகளைக் குறை கூறி ஓர் அறிக்கை விடுவது சுபாஷ் சந்திர போஸின் தேச பக்திக்கே அவமான மூட்டுவதாகும். சுபாஷின் தியாகத்தை நாமும் போற்றுகிறோம். வித்தல்பாய் படேலின் ராஜீய ஞானத்திடத்தில் நமக்கு மதிப்பு மிக உண்டு. ஆனால் அந்த இருவர்களும் தங்கள் உடல் நலமற்ற ஸ்திதியில் தங்களை மறந்து இந்த அறிக்கையை விடுத்தனர் என்றே குறிப்பிட வேண்டி யிருக்கிறது.

'தேச பக்தி' என்ற ஆவேசத்தில் ஏதோ அறியாமல் சுபாஷ் போஸ் மேற்படி வார்த்தைகளைச் சொன்னார் போலும்! மேலும் மேற்படி அறிக்கையில் படேலாகட்டும், சுபாஷாகட்டும் தேசத்துக்குப் புதிய திட்டம் எதையும் குறிப்பிடவில்லை. ஆகவே மேற்படி அறிக்கையைத் தேச மக்கள் பொருட்படுத்த வேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றோம். தேச பக்தியற்ற சிலர், காந்திஜிக்கு விரோதமாக ஓர் கட்சி கிளப்புவதற்காக படேல்-சுபாஷ் அறிக்கையை உபயோகப்படுத்தி விடுவார்களோ வென்ற பயத்தினாலேயே இந்தக் குறிப்பை எழுத நேர்ந்தது.

மந்தரைகள் சூழ்ச்சி

ஒரு மந்தரை கைகேயியோடு சூழ்ச்சி செய்து ராமனைக் காட்டுக்கு ஓட்டினாள். சீமையில் இப்போது பல மந்தரைகள் கூடி சூழ்ச்சி செய்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டை ஆட்டி வைக்க ஏற்பாடு செய்கின்றனர். கன்ஸெர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த ஸ்திரிகள் லண்டனில் ஓர் கூட்டம் நடத்தினார்களாம். அதில் டச்சஸ் ஆப் ஆத்தாள் என்ற குறும்புக்காரி இந்தியாவின் சுயேச்சையை எதிர்த்து விறு விறுப்பான பிரசங்கம் செய்தாளாம்.

இந்தியாவின் மத்திய ஆட்சியை இந்தியர்களிடம் கொடுத்து விடுவதையும் நீதி இலாகாவையும், போலீஸ் இலாகாவையும் மந்திரிகளிடம் கொடுத்து விடுவதையும் குறிப்பிட்டு அதனால் ஆபத்து ஏற்படக் கூடுமென சவடால் அடித்தாளாம். அவளுடைய பேச்சுக்கு அந்த சபையில் ஆதரவு இல்லாது போகுமா? அவள் பிரேரேபித்தது சபையில் நிறைவேறி விட்டதாம்.

ஸ்திரீகள் செய்த இந்தத் தீர்மானத்தை ஒவ்வொருத்தியும் தனது நாயகனிடம் சொல்லுவாள்; தங்கள் பெண்டாட்டிகளை சந்தோஷப் படுத்துவதற்காக அவனவன் பார்லிமெண்டில் ஏதாவது உளறுவான். கடைசியில் இந்தியாவை இன்னும் பலமாக அடக்கியாள ஏற்பாடுகள் செய்யப்படும். என்னே இந்த ஸ்திரீகளின் குறும்பு! இந்த மாதிரி ஸ்திரீகளைக் குறித்தே

"தாமகேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கையர்"

என்று கம்பர் பாடிச் சென்றார் போலும்!

இந்திய சுயேச்சையைத் தடுப்பதற்காக சீமையில் குறும்புக்காரிகள் தங்களாலானதைச் செய்து கொண்டிருக்கும்போது, இந்தியாவில் பிறந்த பெண்கள் 'தேசப் பணி' என்ற நல்ல காரியத்திலாவது ஈடுபடலாகாதா? இந்தியாவை எதிர்ப்பதென்றால் சீமையில் ஆண், பெண், குஞ்சு, குழந்தை அனைவரும், ஒன்று சேர்ந்து எதிர்க்கின்றன ரென்பதற்கு இந்த டோரி ஸ்திரீகள் மகா நாடே சிறந்த உதாரணமாகும்.

'சங்கு சகாய நிதி'

முன் வரவு	108	0	0
ஸ்ரீமதி பட்டம்மாள், திருவல்லிக்கேணி	3	0	0
வேலுஸாமி, திண்டுக்கல்	1	0	0

குடை சாயும் சமயமா?

உலகத்தில் யுத்தங்களை ஒழிக்க படைகள் குறைக்கப்பட வேண்டுமென்று அநேக மகா நாடுகள் ஆய்விட்டன. 'படை குறைப்பு' என்ற தேர் இதுவரை நிலைக்கு வரவேயில்லை. வடத்தை இழுத்து இழுத்து இப்பொழுது ஜெர்மனிக்குச் சலிப்பு வந்துவிட்டது. வடத்திலிருந்த கையை விட்டு விட்டு, சோர்ந்து உட்கார்ந்து ஆரவாரம் செய்ய ஆரம்பித்து விட்டது.

ஜெர்மனியின் அந்நிய நாட்டு மந்திரி நியூராத் என்பவர் ஒரு பத்திரிகையில் இந்தப் படை குறைப்பு மகா நாடு சம்பந்தமாக ஒரு வியாசம் எழுதி யிருக்கிறார். படை குறைப்புத் தேர் குடை சாய்ந்து விடப்போகிறது என்றே அவர் கருதுகிறார். மறுபடியும் முன் போலவே, ஜெர்மனி பெரிய சேனையைத் திரட்டப் போகிறது என்று அவர் அறிவித்துவிட்டார்.

ஜெர்மனி இது வரையில் கேட்டுக் கொண்டிருந்ததெல்லாம் இரண்டே சங்கதி. ஒன்று மற்ற நாடுகள் தன்னைப்போலவே படையைக் குறைத்துக் கொள்ள வேண்டும்; அல்லது, தானும் மற்ற நாடுகளுக்குச் சமமாகப் படை திரட்டிக் கொள்ள அனுமதிக்க வேண்டும். இது தான் ஜெர்மனியின் கோரிக்கை. பிரான்சுக்கோ ஜெர்மனியிடம் நித்திய சந்தேகம். ஏதாவது ஒரு ஏற்பாட்டை யாராவது சொன்னால், "அது வார்சேல்ஸ் உடன்படிக்கைக்கு விரோதம்" என்று அது கூக்குரலிடுகிறது.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டை தீரா முட்டுக் கட்டைபோல் தோன்றுகிறது. படை குறைப்புத் தேர் குடை கவிழ்ந்து போகும் சமயம் வந்து விட்டது போலவே காண்கிறது. இந்த நிலைமைக்கு உண்மையான காரணம் என்ன? உலக சமாதானத்திற்காகவே படை குறைப்பு. ஆனால் அது பற்றிப் பேசும் பொழுதே, மறுபடி யுத்தம் வந்தால் அதற்கு வேண்டிய முஸ்தீப்போடிருக்க வேண்டும் என்பதிலேயே எல்லா நாடும் கருத்தா யிருக்கின்றன. தாலிகட்டும் பொழுது மாப்பிள்ளை செத்தால் பெண்ணுக்கு ஜீவனும்சம் என்ன கிடைக்குமென்று ஆலோசனை செய்தால், கலியாணம் எவ்வளவு சகுனமாயிருக்கும்? அந்த மாதிரி தோரணையில் இந்தப் படை குறைப்பு நாடகமும் நடக்கின்றது. அட அவ நம்பிக்கையே! நீ புரியும் கூத்தல்லவோ இத்தனையும்!

அரோகரா ஆயிடுமோ?

சர்க்கார் பணப் பஞ்சம் இன்று தீர்ந்தபாடில்லை. திரும்பத் திரும்பப் புதுப் புதுக் கடன் பத்திரங்கள் வெளி யிட்டுக்கொண்டே வருகிறார்கள். பழய கடனைப் புதுக் கடனாக மாற்றுகிறார்கள்; புதுக்கடன் வேறு வாங்குகிறார்கள். சில தினங்களுக்கு முன் நூற்றுக்கு 3½ வட்டிக் கடன் பத்திரங்கள் வெளியிட்டார்கள். சில நிமிஷ நேரத்திற்குள், சர்க்கார் கேட்ட அளவுக்கு ரொம்ப அதிகமாகவே அதில் பணங் கிடைத்து விட்டதாம். என்றாலும், சர்க்கார் இதோடு நிற்கப் போவதில்லையாம். ஜுலை ஆகஸ்டு மாதங்களில் சர்க்கார் மறுபடியும் கடன் வாங்கப் போகிற தென்று சொல்லுகிறார்கள்.

சில மாதங்களுக்கு முன், சர்க்கார் கடன் பத்திரங்கள் வெளி யிட்டபோது வெகு சீக்கிரத்தில் பணம் கிடைத்தது. இப்பொழுதோ சில நிமிஷ நேரத்திலேயே கேட்ட பணத்திற்கு மேல் பணம் கிடைத்து விட்டது. கடன் வாங்கப் போனாலும் கை ராசி வேண்டாமா? முன் தடவை சர்க்கார் அப்படித்தான் மார் தட்டிக் கொண்டது. "பாருங்கள், கேட்டவுடனே ஜனங்கள் எங்களுக்குப் பணம் தருகிறார்கள்! எங்கள் நாணயத்தில் எவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது பார்த்தீர்களா?" என்று சர்க்கார் பெருமை பாராட்டிற்று. இப்பொழுதும், சர்க்கார் அதே மாதிரியே ஆனந்தக் கூத்தாடக் கூடும்.

ஆனால், சர்க்கார் கடன் பத்திரத்துக்கு இவ்வளவு மோகம் ஏற்பட்டதற்கு உண்மையான காரணம் என்ன? நாட்டிலே எல்லாத் தொழிலும் நெஞ்சாங்குழியில் இழுத்துக் கொண்டிருக்கின்றது. அநேக தொழில் 3½ வட்டிக்குக் கூடக் கட்டவில்லை. இந்தியத் தொழில்கள் எல்லாம் "அரோகரா" ஆகிவிடும் போல் தோன்றுகிறது. எனவே சர்க்காரிடம் பணத்தைப் போட்டலா மென்று பலர் நினைத்திருக்கலாம். இப்படி இறந்த தொழில்களுடைய சவங்களின் மீது சர்க்கார் தனது பொருளாதாரக் கோட்டையைக் கட்டிக் கொண்டிருக்குமானால், சர்க்கார் நிலை மட்டும் எப்போதும் சவுகர்யமா யிருக்கு மென்று எப்படிச் சொல்ல முடியும்? இன்றைக்கில்லா விட்டால் இன்னும் சில மாதங்களிலோ, வருடங்களிலோ நாணய நெருக்கடி சர்க்காரையும் தொடருமென 'ஸர்ச்லைட்' பத்திரிகை கூறுகிறது.

அடிகளின் கடுந்தவம்

மகாத்மா, உபவாசத்திற்கு முன்பு 103 பவுண்டு எடை யுள்ளவர். உபவாச தினங்கள் அதிகமாக ஆக அவரது எடை குறைந்து கொண்டே வருகிறது. காமாலை அகன்றுவிட்டது. குமட்டல் வருவது மட்டும் ஓயவில்லை. "இதே மாதிரி இருந்தால் உபவாஸ நாட்களை காந்திஜி சுலபமாகத் தாண்டி விடுவார்" என்று டாக்டர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். டாக்டர்கள் வற்புறுத்தியதால் கடிதங்கள் எழுதுவதையும் நூல் நூற்பதையும் காந்திஜி நிறுத்தி விட்டார்.

"நான் சாவதானால் டாக்டர் அன்ஸாரியின் மடியில் சாவதற்குப் பிரியப்படுகிறேன்" என்று நாலாவது தினத்தில் காந்திஜி சொன்னார். இந்தச் செய்தி அன்ஸாரிக்கு அறிவிக்கப்பட்டதும், "நான் அவரை என் மடியில் உயிர் துறக்க விடுவேனா? அவர் சாவதற்கே நான் விடமாட்டேன்" என்று அன்ஸாரி தெரிவித்து விட்டு



டாக்டர் அன்ஸாரி

பூனாவுக்குப் புறப்பட்டு வந்து விட்டார். மகாத்மாவின் தேக நிலையைக் கவனித்து வருகிறார்.

மகாத்மா தவஞ் செய்யும் இடத்திற்கு 'பர்ணகுடி' என்று பெயர். அதைச் சுற்றிலும் மலைகள் உள. அம்மலைகளில் வெடி வைத்துக் கற்பாறைகளைப் பிளப்பது வழக்கம். அதனால் சத்த மேற்படுவ துண்டு. இதைச் சில காலம் நிறுத்தி வைப்பதற்கு ஏற்பாடாகி வருகிறது.

மகாத்மாவைத் தரிசிக்கும் வரை உண்ணா விரதத்தை அனுஷ்டித்துக் கொண்டிருந்த ஜகராஜு என்ற ஆந்திர நண்பருக்கு மகாத்மா தரிசனம் கொடுத்தார்.

ராஜாஜி வேண்டுகிறார்

"காந்திஜியின் உபவாஸ காலத்தில் ஒவ்வொருவரும் சாப்பிட உட்காரும்போது காந்திஜியைப் பற்றி நினைத்துக் கொள்ள வேண்டும். உலகுக்கெல்லாம் உணவளிக்கும் பரம்பொருள் யாதொரு அபாயமும் வராது மகாத்மாவைக் காக்க வேண்டுமென்றும், அவரைச் சக்திவானாக ஆக்கி நம்மிடம் தரவேண்டுமென்றும் வேண்டிக் கொள்வோமாக! குழந்தைகள் முக்கியமாக இந்த பிரார்த்தனையைச் செய்ய வேண்டும். ஏனெனில் கல்மஷமற்ற இருதய முடைய குழந்தைகளின் பிரார்த்தனை கட்டாயம் ஈசனை அடையும்.

இனிமேல் காந்திஜியின் உயிருக்கு ஒவ்வொரு மணியும் சோதனை காலமாகும். ஆகவே இந்த தேசத்திலுள்ள அத்தனை மக்களின் பிரார்த்தனையும் ஒருமிக்கச் சேர்ந்து அந்தத் தியாகிக்குப் புத்துயிரளிக்குமாக.

கமலக் குஞ்சும் காந்தியும்

மகாத்மாவுக்கு மதுரையிலுள்ள ஒன்பது வயதுச் சிறுமியாகிய கமலா அடிக்கடி ஹிந்தியில் கடிதங்களெழுதிக் கொண்டிருக்கிறாள். சமீபத்தில் மகாத்மாவின் விடுதலைக்காக சந்தோஷப்பட்டு அக்குழந்தை ஓர் தந்தி யடித்தாள். முன்னொருக்கால் இக்குழந்தை தனது கழுத்திலின்று ஒரு நகையைக் கழற்றி மகாத்மாவுக்கு அனுப்பி "இதை ஹரிஜன நிதிக்கு உபயோகியுங்கள்" என்று வேண்டிக் கொண்டது. மகாத்மாஜி இந்தக் குழந்தையின் ஹிந்தி ஞானத்தைப் போற்றி 100 ஹிந்திப் புத்தகங்கள் அனுப்பியதோடு, "நான் தென்னிந்தியாவுக்கு வரும்போது உன்னை வந்து பார்க்கிறேன்" என்று கடிதம் எழுதி யிருக்கிறார்.

சீனாவில் மகாத்மா பக்தர்

'தான்யஷான்' என்ற புத்த சந்யாசி சீனாவில் இருக்கின்றார். சில வருடங்களுக்கு முன் அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்தவர். காந்தியடிகள் உபவாச மிருக்கின்றாரென்பதைக் கேள்விப்பட்டு, "மனித வர்க்கம் வாழவேண்டுமென்று மகாத்மா பட்டினி கிடக்கின்றார். அவருடைய கோரிக்கை ஈடேற வேண்டும். ஆகவே மகாத்மாவோடு நானும் உபவாசம் இருக்கப் போகிறேன். சாகும் வரை உண்ணா விரதமிருப்பேன்" என்று விரதம் பூண்டிருக்கின்றாராம்.


காந்தி வாழ—தீண்டாமை ஒழிய

பல்லவி

ஓட்டடா! ஓட்டடா! நாட்டைவிட்டு ஓட்டடா!
திட்டடா மனிதருக்குள் தீண்டாமையாந் தீமையை

சரணங்கள்

1. தொத்து நோய்கள் மெத்தவும் தொடர்ந்துவிட்ட பேரையும்
தொட்டுகிட்டிச் சொஸ்த்தமாக்கல் தர்மமென்று சொல்லுவார்
சுத்தமேனும் ஜாதியால் தொடப்படாது என்றிடல்
சொன்ன அந்த நோயிலும் கொடியரென்று சொல்வதோ?
(ஓட்டடா)



2. செடி மரங்கள் கொடிகளும் ஜீவரென்ற உண்மையை
ஜெகமறிந்து கொள்ளமுன்பு செய்ததிந்து தேசமே
முடிவறிந்த உண்மை ஞானம் முற்றிநின்ற நாட்டிலே
மூடரும் சிரிக்குமிந்த முறையிலா வழக்கமேன்? (ஓட்டடா)

3. நாய் குரங்கு பூனையை நத்திமுத்த மிடுகிறோம்
நரகலுண்ணும் பன்றியும் நம்மைத்தீண்ட ஒப்புவோம்
ஆயும் ஆறு அறிவுடை ஆத்மஞான மனிதனை
அருகிலே வரப்பொறுமை அறிவிலே பொருந்துமோ? (ஓட்டடா)

4. உயிரிருக்கும் புழுவையும் ஈசனுக்கு உறையுளாய்
உணருகின்ற கருணைஞானம் உலகினுக்குரைத்த நாம்
உயருகின்ற ஜீவருக்குள் நம்மொடொத்த மனிதனை
ஒத்திப்போகச் சொல்லுகின்ற தொத்துக்கொள்ள லாகுமோ
(ஓட்டடா)

5. அமலனாகி அங்குமிங்கும் எங்குமான கடவுளை
ஆலயத்துள் தெய்வமென்று அங்கிருந்து எண்ணுவோம்
விமலனான கடவுள்சக்தி மனிதன்கிட்டி விலகுமேல்
வேறுஜீவர் யாரும் போற்றும் விமலனென்பதெப்படி? (ஓட்டடா)

6. ஞாயமல்ல! ஞாயமல்ல! ஞாயமல்ல! கொஞ்சமும்
நாடுகின்ற பேர்களை நாமிடைத் தடுப்பது
பாயுமந்த ஆற்றிலே பறவையாதி மிருகமும்
பருகிவெப்பம் ஆற இந்தப் பாரிலார் தடுப்பவர்? (ஓட்டடா)

7. தீமைமிக்க ‘தீண்டாமை’ தீர்ந்து நன்மைசேரவே
தெய்வ ஆணை கண்டகாந்தி பட்டினி கிடக்கிறார்
‘தூய்மைமுற்றி பலமிருந்து காந்தி வாழ்க’ வென்றுநாம்
சூழ்ந்துகொண்டு கடவுளைத் தொழுதுநின்று போற்றுவோம்
(ஓட்டடா)

—நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை.

"ஸ்வஸ்திகா"



ஜர்மனியில் ஒவ்வொரு முக்கியமான கட்டிடத்தின் மீதும் மேலே காட்டியிருக்கும் உருவம் தாங்கிய 'ஸ்வஸ்திகா' கொடியை ஹிட்லர் கட்சி பறக்க விட்டிருக்கிறது. பத்து வருடத்துக்கு முன்னே ஹிட்லர் இந்தக் கொடியைக் கண்டு பிடித்தான். ஜர்மன் இளைஞர்களுக்கு இது ஆவேசமூட்டு மென்று கூறினான்.

'ஸ்வஸ்திகா' என்பது ஆர்யா வர்த்தத்தைச் சேர்ந்த ஓர் உருவமாகும். நாலாவது நூற்றாண்டில் இந்தியாவில் இவ்வுருவம் மிகவும் வழக்கத்தி லிருந்தது. இதைப் பார்த்து எகிப்து, அஸ்ஸீரியா, பாபிலோன், கிரீஸ் முதலிய இடங்களின் கல்தச்சர்களும் தங்கள் வேலைப்பாடுகளில் புகுத்திக் கொண்டனர். ஆர்யா வர்த்தத்தின் அழகுக் குறியாக இது அக்காலத்தில் இருந்து வந்தது.

இப்போது ஜர்மனியில் இரண்டு வித ஜாதிகள் இருந்து வருகின்றன. அவைகளுள் ஆர்ய உதிரம் ஓடும் ஜாதியினர் பெரும்பாலான ஜர்மானியர்கள் ஆவர். ஆகவே ஆர்ய உதிரத்தின் சிறப்பைக் காட்டுவதற்கே ஹிட்லர் இந்த ஸ்வஸ்திகா குறியை தமது கட்சிக் கொடிக்கு எடுத்துக் கொண்டானும்.

இப்போது அரசாங்க கட்டிடங்களில் மட்டுமின்றி அநேக தொழிற்சாலைகள் மீதும் இவ்வுருவமடங்கிய கொடி ஜர்மனியில் பறக்கின்றது. பிஸ்கோத், சிட்டுக் கட்டு, பென்ஸில் முதலிய சாமான்களைத் தயாரிப்பவர்கள் இந்த 'ஸ்வஸ்திகா' உருவத்தை டிரேட் மார்க்காக உபயோகிக்க ஆரம்பித்தனர். நன்றாய் விற்பனையாகுமென்பது வர்த்தகர்களின் எண்ணம். ஆனால் ஹிட்லர் அதைத் தடுத்து விட்டான். இந்தத் தேசிய உருவத்தை கண்டா கண்டபடி உபயோகிக்க லாகாதென்பது அவன் உத்தரவு. ஆகவே ஒரு பிஸ்கோத் தொழிற்சாலை, ஒரு பென்ஸில் தொழிற்சாலை இவைகளுக்கு நஷ்டமேற்பட்டு விட்டதாம்.

இந்தியாவில் 'சர்க்கா', 'தேசியக் கொடி' 'காந்தி' 'ஜவஹர்லால்' முதலிய டிரேட்மார்க்குகளை உபயோகித்து சாமான் தயாரிக்கிறவர்கள் ஜர்மனியில் ஹிட்லரின் உத்தரவை கவனிக்குமாறு கோருகிறோம்.

துப்பாக்கி முனையில் ஆளவா?

(எ. ஜி. கார்டினர்)

இந்தியா ஓர் பரந்த பூமி. அதில் இங்கிலாந்தை வைப்பதென்றால் ஒரு மூலையில் வைத்து விடலாம். இங்கிலாந்திலுள்ள இவ்வளவு ஜனங்களும் குடி புகுந்தாலும் இந்தியாவில் வித்தியாச மேற்படாது. இவ்வளவு காலம் இந்தியாவை ஆண்டு வந்தது போலவே இன்னமும் ஆண்டு வரலாகாதா? என் அரசியலை மாற்ற வேண்டுமென்று கேட்கலாம். ஏனெனில் காலம் மாறி விட்டது. லண்டனிலிருந்து தாங்கள் ஆளப்படுவதை இந்தியர் விரும்பவில்லை.

ஒரு தலைமுறையாக இந்தியாவில் கிளர்ச்சி நடந்து வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடிமைகளா யிருக்கலாகாதென கிளர்ச்சியலைகள் மோதுகின்றன. கோகலே போன்ற அறிவாளிகள் இந்தக் கிளர்ச்சியைத் துவக்கினர். தங்கள் தேசத்திலேயே தங்களுக்கு மரியாதைக் குறைவு ஏற்படுவதை இந்தியர் சகிப்பார்களா?

இந்த வேகத்தை எதிர்க்கலாமென சர்ச்சில் நமக்கு ஆலோசனை சொல்கிறான். நாம் நமது மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு இந்தியாவினின்று திரும்பி விட வேண்டுமென மாக்ஸ்டன் சொல்லுகிறான். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலேயே ஒரு பகுதியாக வைத்துக் கொண்டு இந்தியாவுக்கு சுயாட்சி தரவேண்டுமென வேறோர் சாரார் சொல்கின்றனர்.

ஒரு தேசத்தை இன்னொரு தேசம் பன ஒற்றுமையின்றி ஆளுவதென்பது முடியாத காரியம். அமெரிக்காவில் முயற்சி செய்து தோற்றோம். கானடாவில் தோற்றோம். அயர்லாந்திலும், தென்னாப்பிரிக்காவிலும் தோற்றுப் போனோம். 35 கோடி மக்களை அவர்களிஷ்டத்துக்கு விரோதமாக நமக்கு அடி பணியச் செய்யலாமென சர்ச்சில் கூறுவது நடக்கக் கூடிய காரியமா? அப்படிச் செய்ய முயன்றால் இப்போதுள்ள பிரிட்டிஷ் இராணுவத்தை மூன்று பங்கு ஆக்கவேண்டும். அப்போது தான் துப்பாக்கி முனையில் நம்மால் ஆள முடியும்?

—"ஜான் புல்."

[இவ்வளவு நன்றாகக் கட்டுரை எழுதிய கார்டினர் கடைசியில் கூட்டுக் கமிட்டி வழியை ஆதரிப்பது தான் வருந்தத்தக்க விஷயம். —சங்கு ப-ர்.]

அமெரிக்கா ஸத்தியாக்கிரகம்

ஐக்கிய அமெரிக்காவில் மின்னி போலி என்பது ஓர் மாகாணம். அந்த மாகாணத்திலுள்ள குடியானவர்கள் வறுமையால் மிகவும் வருந்துகிறார்களாம். ஆகவே அவர்கள் சத்தியாக்கிரகம் செய்யவும் சட்ட மறுப்புச் செய்யவும் ஆரம்பித்திருக்கிறார்களாம். துண்டுப் பிரசுரங்களில், "காந்தி என்பவரின் அடிச்சுவட்டை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்றும், மகா பராக்கிரமம் வாய்ந்த இங்கிலாந்து அடி பணியுமாறு அவர் செய்து விட்டதாகவும்" அக் குடியானவர்கள் வெளியிட்டிருக்கிறார்களாம்.

விவசாயிகள் மசோதா

அமெரிக்க விவசாயிகள் கஷ்ட நிவாரண மசோதா செனெட் சபையில் நிறைவேறியது. டாலரில் தங்கத்தைக் குறைத்து அச்சுப்போடவும், பணச் செலாவணியைப் பெருக்கவும் பிரசிடெண்டுக்கு அதிகாரம் கொடுக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. பருத்தி, கோதுமை, அரிசி முதலிய தானியங்களின் விலையை ஒரு சராசரி விலைக்கு வரும்படி செய்யவும், புகையிலை விலையை உயர்த்தவும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடமான பாங்கிகள் மூலம்விவசாயிகளுக்கு கொடுத்துதவவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் விவசாயிகளைக் கவனிப்பாருண்டா?

இந்தியனுக்கு பகிஷ்காரம்

சிலோனில் தெற்குப் பாகங்களில் "இந்திய வர்த்தகனைப் பகிஷ்கரியுங்கள்" என்று ஓர் பிரசாரம் பலமாய் நடந்து வருகிறதாம். இப்போது இந்தியன் மீது உலகம் முழுதும் 'பகிஷ்கார'க் கத்தியை வீசிக் கொண்டிருக்கிறது. தென்னாப்பிரிக்காவில் இந்தியனை பகிஷ்கரிக்கின்றனர். பர்மாவில் இந்திய பகிஷ்காரம். சைகோனில் இந்தியனுக்கு நாடு கடத்தல் சிக்ஷைகூட உண்டு. ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலுமோ இந்தியனுக்குத் தங்குவதற்குக்கூட இடம் கிடைப்பதில்லை. இந்தியனாய்ப் பிறந்தால் இந்த அவதியா? இந்தியாவையும் ஒரு அரசாங்கம் ஆண்டு வருகிறதே, அது என்ன செய்து கொண்டிருக்கிறது? பிற நாடு சென்றுள்ள தனது பிரஜைகளைக் காப்பாற்றும் பொறுப்பு உள்நாட்டு அரசாங்கத்துக்கு இல்லையோ? இனிமேலாவது இந்திய அரசாங்கம் விழித்துக் கொள்ளுமா?

படிக்குப் பாதி போதாதா?

ஒவ்வொரு மாகாணத்திலும் கல்வி இலாகாவுக்கு 'டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்' என்று நீளப் பெயருடைய ஒரு உத்யோகஸ்தர் இருந்து வருகிறார். அந்த உத்யோகஸ்தரின் சம்பளங்களும் 2500இலிருந்து 3000 வரை இருந்து வருகிறது. இவர்களுக்கு மேலே இந்திய துரைத்தனத்தில் 'எடுகேஷனல் கமிஷனர்' என்று ஒரு உத்யோகஸ்தர் உண்டு. அவருக்கு 3000 ரூபா நறுக்காக மாதா மாதம் கொடுத்துக் கொண்டிருந்தனர். அவர் ஸிம்லாவினின்று மாகாணத்திலுள்ள டைரக்டர்களை மேற் பார்வையிட்டுக் கொண்டிருப்பார். சமீப காலத்தில் சிக்கனக் கமிட்டியின் சிபார்சின்படி அந்தக் கமிஷனரின் சம்பளம் 1500 ஆக்கப்பட்டு விட்டது. 3000 ரூபா உத்யோகம் 1500 ரூபா ஆனவுடன் அதற்கு ஆள் கிடைப்பது கஷ்டமா யிருக்கிறதாம். மேலும் 1500 ரூபா சம்பளம் வாங்கும் ஒரு உத்தியோகஸ்தன் 3000 ரூபா சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள்மீது ஆட்சி செய்வது கல்வி இலாகாவில் பலருக்குப் பிடிக்க வில்லையாம். ஆகவே டெல்லி அதிகாரியின் சம்பளத்தை உயர்த்தி விடலாமா என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம்.

நமக்கொரு யோசனை தோன்றுகிறது. டெல்லி உத்யோகஸ்தன் சம்பளத்தைப் படிக்குப் பாதி ஆக்கினதுபோல மாகாணங்களிலுள்ள டைரக்டர்களின் சம்பளங்களையும் படிக்குப் பாதியோ அல்லது இன்னும் குறைவாகவோ ஆக்கி விட்டால் அந்தத் தகராறு ஏற்படாதல்லவா? அதனால் சர்க்காருக்கும் பணம் மிச்சமாகும்.

மாகாணங்களில் கல்வி இலாகாத் தலைவர்களுக்கு பெரிய சம்பளங்கள் கொடுத்துக் கொண்டு வருவதனால், கல்வி பிரமாதமாக விருத்தியாகி விடுவதாகத் தோன்றவில்லை. 3000 ரூபா டைரக்டர் போய், 1000 ரூபா டைரக்டர் வந்ததால் கல்வி முன்னேற்றம் குறையவே குறையாதென்று தோன்றுகிறது. ஆகவே எல்லா மாகாணங்களிலும் கல்வித்தலைவர்கள் சம்பளத்தைக் குறைத்து விடுவதுதான் நல்ல வழியென்று தோன்றுகிறது. சர்க்கார் செய்யுமா?

ஹரிஜன உதவி

மதுரையில் சில ஸ்திரீகள் ஹரிஜனச் சேரிக்குச் சென்று பனியன்களும், துண்டுகளும், ரவிக்கைகளும் இனாமளித்தார்களாம். ஏதாவது ஒரு சேரியில் நடக்கும் பள்ளிக்கூடத்துக்கு மாதம் 10 ரூ. கொடுத்துதவுவதாக ஸ்ரீமான் ஏ. வைத்தியனாதய்யர் கூறினாராம்.

கராச்சியில் ஹரிஜன முன்னேற்ற ஊழியம் செய்வதற்காக ஹிந்து தீண்டாதார் ஊழியக் கமிட்டியார் 5000 ரூபாய் வரையில் சேர்த்திருக்கிறார்களாம்.

தண்டனை

மதுரைக்கடுத்த கிராமங்களில் பிரசாரம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டவர்களில் இருவருக்கு 6 மாதமும், 25 ரூபாயும், மற்று மிருவருக்கு 2 மாதமும், 10 ரூபாயும் தண்டனை விதிக்கப்பட்டது. கள்ளிக் கோட்டையில் கோபிகுருப்புக்கு ஒரு வருஷம்; மற்றும் 7 தொண்டர்களுக்கு தலா 6 மாதம் கடுங்காவலும் தண்டனை விதிக்கப்பட்டது. மதுரையில் சட்ட மறுப்பு நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறோம்.

சட்டமறுப்புக் கைதிகள்

இம்மாத ஆரம்பத்தில் சென்னை ராஜதானிச் சிறையிலிருக்கும் சட்ட மறுப்புக் கைதிகளின் மொத்தம் 796. ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் தண்டிக்கப்பட்டவர்கள் 82.

ஜாமீன்

பம்பாய் கவர்ன்மெண்டார் "நவகால்" என்னும் ஒரு பிரபல மகாராஷ்டிர பாஷைப் பத்திரிகைக்கு ரூ. 3000மும், அச்சுக்கூடத்துக்கு ரூ. 3000மும் ஜாமீன் கேட்டிருக்கின்றனர்.

தீண்டாமை விலக்குக் கூட்டத்தில் பேசுவதற்காக கல்கத்தாவிலிருந்து புறப்பட்ட 4 பேர்கள் குல்னப்பாரா என்னுமிடத்தில் கைது செய்யப்பட்டனர்.

கல்கத்தாவுக்கருகில் உள்ள ஆரம்பாக் என்னும் ஊரிலுள்ள 500 பேர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தேதியில் வந்து ஆஜராகி, யூனியன் போர்டு வரியைக் கொண்டு வந்து கொடுக்க வேண்டுமென்று சப் டிவிஷன் ஆபீஸர் உத்திரவிட்டிருக்கிறார்.

பம்பாயில் காந்தி தினத்தன்று ஊர்வலம் நடத்தியதற்காக மூன்று காங்கிரஸ் தொண்டர்களுக்கு 6 மாதக் கடுங்காவலும், 50 ரூ. அபராதமும். நதியா ஜில்லா மகாநாடு கூட்டியதன் சம்பந்தமாக, தலைவருக்கும், வரவேற்புத் தலைவருக்கும் தலா 8 மாதமும் 100 ரூபாயும், ஒருவருக்கு 6 மாதமும் 75 ரூபாயும். 4 ஸ்திரீ தொண்டர்களுக்கும் தலைவிக்கும் தலா 6 மாதம். மற்றொரு ஸ்திரீக்கு 4 மாதம்.

வில்லிங்டனுக்கு ஹோரின் 'சோப்பை'

ஸர். சாமுயேல் ஹோர் ஒரு பிரசங்கத்தில் பின்வருமாறு தற்புகழ்ச்சி செய்து கொண்டாராம் :—"வைஸ்ராய் தளரா முயற்சி எடுத்துக் கொண்டார். அதன் பயனாக 18 மாதங்களுக்கு முன்னிருந்ததை விட இந்தியாவின் நாணயம் உறுதிப்பட்டிருக்கிறது. பகிஷ்கார இயக்கத்தை நசுக்கித் தொலைத்து விட்டோம். சட்ட மறுப்பின் வேகம் மிகக் குறைந்து விட்டது. மிகவும் சில அரசியற் கைதிகளே இப்பொழுது சிறையிலிருக்கின்றனர்."

இவ்வாறு இந்தியா மந்திரி "சொப்பை" கொடுத்துக் கொண்டேயிருந்தால் வைஸ்ராயின் உச்சி என் குளிராது ?

விருந்தாளிகளுக்குத் தனி வீடு

"கூட்டுக் கமிட்டி சாட்சிகளை விசாரிக்கும் போது நாங்களும் உள்ளே இருக்கலாமா" என்று இங்கிருந்து இந்தியப் பிரதிநிதியாகப் போனவர்கள் கேட்டார்கள். கமிட்டித் தலைவர் "அதைப் பற்றி நான் சொல்ல முடியாது. அது கமிட்டியின் இஷ்டத்தைப் பொறுத்தது" என்று கையை விரித்து விட்டார். "தனியாக நாங்கள் ஆலோசனை செய்வதற்கு ஒரு இருப்பிடமாவது கொடுக்க முடியுமா" என்று பிரதிநிதிகள் கெஞ்சினார்களாம். போனால் போகிறதென்று ஒரு வீட்டை ஒழித்துக் கொடுத்தார்களாம்.

கட்டளைக்குக் கீழ்ப்படிக!

"சர்க்காரை எதிர்பார்த்து சட்ட மறுப்பு நிறுத்தப்படவில்லை. ஆசையால் காந்திஜியின் முடிவுப்படி காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஆனே சட்ட மறுப்பை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி கட்டளையிட்டிருப்பதால், அதற்கு நாம் முற்றிலும் கீழ்ப்படிய வேண்டும்" என்று ராஜாஜி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R, Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.